# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்தசெயற்திறன் அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2017

## නගරසැලසුම්හා ජල සම්පාදනඅමාත්‍යාංශය

## நகரதிட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு

## MINISTRY OF CITY PLANNING ANDWATERSUPPLY


අංක. 35, “ලක්දියමැඳුර”, නව පාර්ලිමේන්තු පාර,පැලවත්ත,බත්තරමුල්ල.

இல 35,“லக்தியமெதுர”,புதியபாராளுமன்றவீதி,பெலவத்த,பத்தரமுல்ல

**No. 35, “LakdiyaMedura”, New Parliament Road, Pelawatta, Battaramulla.**

# வருடாந்த

# செயற்திறன் அறிக்கை

# 2017

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு


**இல 35 "லக்திய மெதுர" புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல**
**தொலைபேசி 011-2177240,011-2177241**
**தொலைநகல்- 011-2177242**
**மின்னஞ்சல் - secretary@mcpws.gov.lk**
**இணையதளம் –www.mcpws.gov.lk**

# இலக்கு

சிறந்த வாழ்க்கைக்கு திட்டமிடப்பட்ட நகரங்கள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகநல வசதிகளை வழங்குதல்

# பணி

உயிரியல் சுற்றாடல் மற்றும் நீர் வளம் என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நிலையான நகர திட்டமிடல், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் போதுமான அளவு மேம்படுத்தப்பட்ட சுகநல வசதிகளை வழங்கல் போன்றவற்றின் மூலம் பொதுமக்களின் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கான வசதிகளை வழங்குதல்

# கௌரவ அமைச்சரின் செய்தி



நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் முதன்மை பொறுப்புகளாக வழங்கப்பட்டுள்ள பணிகள் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் போதிய சுகநல பாதுகாப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களின் சிறுநகரங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களின் வாழ்கை நிலைமைகளை மேம்ப டுத்துவதற்கு பங்களிப்பு செய்தல் என்பனவாகும் .

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை மேற் கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் பல் வேறு நீர் விநியோக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன அவற்றில் ஹாலிஎல,நீர் வழங்கள் திட்டம்,கிளிநொச்சி புனரமைப்பு நீர் வழங்கள் திட்டம்,மொனராகலை புத்தளை ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டம், கொலொன்ன பலாங்கொடை நீர்வழங்கள் திட்டம் லபுகம களடுவாவ நீர்வழங்கள் திட்டம் கிழக்கு மாகாண நீர் வழங்கும் திட்டம் என குறிப்பிடப்பட்ட திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளதுடன் இதன் மூலம் 335,000 அதிகமான மக்கள் பயன் அடைகிறார்கள்.

மேலும் 2017 ஆம் ஆண்டில் மாத்தறை, தம்புத்தேகம, கட்டான, அளுத்கம, மதுகம, தெதுரு ஓயா, அலவ்வ, பொல்கஹவெல, களனி வலது கரை (கட்டம் II) கம்பஹ அத்தனகல்ல, கண்டி (வடக்கு) மற்றும் பாததும்பர ஆகிய இடங்களில் நீர் வழங்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன இந்த திட்டங்கள் முடிவடைந்த பின் இப்பகுதிகளில் பாரிய பிரச்சினையாக காணப்படும் குடிநீர் பிரச்சினைக்கு உரிய தீர்வு ஏற்படும்.

குடிநீரினால் சிறுநீரக நோய் ஏற்படும் 11 மாவட்டங்களில் வாழும் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண விஷேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இதற்காக 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 1000 மில்லியன் ரூபா அளவு பெறுமதியான நிதியை பயன்படுத்தி நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்குதல் நீர் விநியோக அமைப்பில் புதிய நீர் இனைப்புக்களில் நீர் குழாய்களை நீடித்தல். பவுசர்கள் மூலம் நீர் வழங்குதல் மற்றும் இந்த ஆண்டில் சிறுநீரக நோயைத் தடுப்பதற்கான நோக்கத்தில் சீனா அரசாங்கத்தின் நன்கொடையில் ஒரு நீர் ஆய்வுகூத்தை அமைக்க பேராதனை பல்கலைகழக வளாகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

வீதி அபிவிருத்தி, பூங்காக்கள், விளையாட்டுமைதானங்கள் மற்றும், பல்நோக்கு கட்டிடங்கள், மயானங்கள் மற்றும் நீர் வழங்கும் திட்டங்கள் பிரதேச மக்களின் அடிப்படை மேம்பாட்டு வசதிகளை வழங்க முடிந்தது மகிழ்ச்சிக்குறிய விடயமாகும்.சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 2,175 மில்லியன் ரூபா ஒதுக்கிடும் பூங்காக்கள் மைதானங்களுக்கு 210 மில்லியன்ரூபாவும் பல்வகைக் கட்டிடங்களுக்காக 405 மில்லியன் ரூபா ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளதுடன் இதில் 18 திட்டங்கள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன

நீர் விநியோக திட்டங்ககள் 23ல் 17இன் பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளமை. பெரும் பாக்கியமாக கருதுகிறேன் மேலும் அவசர சந்தாப்பங்களில் மக்களுக் ஏற்படும் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. மற்றும் டெங்கு ஒழிப்பு திட்டத்திற்காக 14.5 மில்லியன் ரூபா நிதியை பயன்படுத்தி 03 கழிவகற்றும் பவுசர்கள் பொது மக்கள் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளன.மற்றும் வரட்சியால் பாதிப்படையும் பகுதிகளுக்கு வழங்குவதற்கு 235 பவுசர்கள் கொள்வனவு செய்ய முதலீடு செய்யப்பட்டு 09 பவுசர்கள் மக்கள் சேவைக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் எமது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள இன்னுமொரு பொறுபானது சுகநலப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதாகும். இதற்காக பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதன் மூலம் கழிவகற்றும் குழாய் அமைப்பு மேம்படுத்தப்படும் இத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் மக்களின் வாழ்கை தரத்தை உயர்த்துவ தோடு மேம்பாட்டு இலக்குகளை நிறைவேற்றுடுவதன் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் நான் ஒரு முக்கிய பாங்கை வகிக்கின்றேன் என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

**கௌரவ ரவூப் ஹக்கீம் (பா.உ)**
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

# அமைச்சின் செயலாளரின் செய்தி



நோக்கங்கள் 17ளும், 169 இலக்குகளையும் 244 குறிக் கோள்களை கொண்ட நிலையான அபிவிருத்தியை நோக்கை (SDGs) அடைவதற்கு செல்லும் பயனத்தில் எமது அமைச்சகம் நேரடியக 6வதுநோக்கமாகிய அனைவருக் நீர் மற்றும் சுகதார வசதிகளை உறுதிப்படுதும்நிலையான முகாமைத்துவத்தையும் மற்றும் 11 நோக்கமாகிய நகர மற்றும் குடியிருப்புகளுக்கு நிலையான ஒருங்கினைந்த பாதுகாப்பை வழங்குவதற்கு நேரடியாக பங்களிப்புக்கள் வழங்குவதுடன் மற்றய நோக்கங்களுக்கு மறைமுகமாக பங்களிப்பு வழங்குகின்றது ஏனென்றால் நீர் ஒரு இன்றியமையாத வளம் என்பதால் ஆகும்.

2017.12.31 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்பில் 49.2% மக்கள் தொகைக்கு குழாய் நீர் விநியோகத்தை வழங்கியதுடன் 2017 ஆம் ஆண்டில் 126,701 வழங்கியதுடன் 2017 வழங்கிய மொத்த நீர் இணைப்பு 2,219,172 ஆகும்.

2017 ஆம் ஆண்டில் பாரிய அளவிலான 06 நீர்வழங்கும் திட்டங்களை நிறைவு செய்வதற்கும் மற்றும் 11 புதிய திட்டங்கலை ஆரம்பிப்பதற்க்கும் முடிந்தது நாம் பெற்ற பாக்கியமாக கருதுகிறேன் மேலும் காரணம் அறியப்படாத சிறுநீரகவியவியல் நோய் பரவும் பகுதிகளுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக 95 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குறிய விடயமாகும் மற்றும் அமைச்சின் கீழ் உலக வங்கி நிதியில் இயங்கும் நீர்வழங்கல் மறறும் சுகாதார பாதுகாப்பு மேம்காட்டு செயல் திட்டத்தின் ஊடாக 7 மாவட்டங்களுக்கு நீர் மற்றும் சுகாதார மேம்பாட்டு வசதிகள் வழங்குவதுடன் மேலும் சுகாதார மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தி திட்டங்களின் நிதி உதவியில் குடிநீர் இல்லாத பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு நீர் பவுசர்களை வழங்குதல்

மேலும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதி 2017 ஆம் ஆண்டில் 100% முன்னேற்றத்துடன் சமூகத்தின் நன்மைக்காக பயன்படுத்தப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் சிறு நகரங்களின் அபிவிருத்திக்காக ரூபா. 2,500மில்லியன் அளவில் பயண்படுத்தி 19 மாவட்டங்களின் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பான குடிநீரை மக்களுக்கு வழங்கும் திறனை மேம்படுத்துவதற்கும் நிலையான நகர அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்வதற்கு கிடைத்ததை நாம் பெற்ற பாக்கியமாக கருதுவதுடன் அதன் மூலம் நிலையான அபிவிருத்தி நோக்கத்தை (SDGs) அடைவது எனது பிரார்தனையாவதுடன் நீரை சிக்கனமாக பயன் படுத்துமாறு மக்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்

செயலாளர்

**டி.ஜி.எம்.வீ ஹப்புஆரச்சி**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

# பொருளடக்கம்

## முதலாவது அத்தியாயம்


- அறிமுகம், கருமங்கள் 1-2
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 3-4
- இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் 5-7
- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்திறனை அளவிடுவதற்கான சுட்டிகள் 8


## இரண்டாவது அத்தியாயம்


- செயற்திறனை அடைவதற்காக 2017 ஆண்டில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள்
  - 2017 ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்2017.12.31திகதிக்கான முன்னேற்றம் 9-10
  - அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள் 11-38
  - தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட கருமங்கள் 39-60
  - தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் 2017 ஆண்டில் அமுல்படுத்திய கருதிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் 61-63


## மூன்றாவது அத்தியாயம்


- 2017 ஆண்டின் அடைவுகளின் செயற்திறன் 64
- 2017 புதிய நீர் இணைப்புக்கள்ளின் இலக்கு மற்றும் வழங்கிய தொகை (மாகாண, மாவட்ட ரீதியில்) 65
- நிறைவுக் குறிப்பு 66-67

**அறிமுகம்**

வளி, நீர், உணவு ஆடை அணி கலன்கள் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளாகும். வளி மனிதனின் அடிப்படைத் தேவையாக இருந்தபோதிலும் தூய்மையான வளி மிகவும் வரையறுக்கப்பட்ட சுற்றாடல் தவிர்ந்த ஏனைய இடங்களில் இன்னும் இயல்பாகப் பெறக்கூடிய இயலுமையுள்ளது. கடந்தகாலங்களில் தூய்மையான நீரை இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்தபோதிலும் சனத்தொகை அதிகரிப்பு, கைத்தொழில்களின் அதிகரிப்பு போன்றவற்றால் இயற்கைச் சூழல் அழிவடைதல் மற்றும் காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் தூய்மையான குடிநீரை பெற்றுக் கொள்வது இன்று சிரமமான விடயமாக மாறியுள்ளது. நீரானது உயிரொன்றின் பிறப்பிலும் இருப்பிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும் முதன்மையான தீர்மானிக்கும் காரணியென்பதனால் அனைத்து அரசாங்கங்களுக்கும் தமது நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நீரை வழங்கவேண்டிய பொறுப்புள்ளது.

அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களுக்கு பாதுகாப்பாக வழங்குவதன் முக்கியத்துவம் காரணமாகவே இது தொடர்பில் சர்வதேச ரீதியிலும் கவனம் செலுத்தப்பட்டதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் மிலேனியம் அபிவிருத்தி இலக்கு உருவாக்கப்படும்போது இலக்குக் குறிக்கோள் இல. 07 இல் 1990 ஆண்டில் 64% ஆக இருந்த பாதுகாப்பான குடிநீர் வழங்களை 2016 ஆண்டளவில் 89.7% வரை அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதனை அடைய முடிந்துள்ளது.

மிலேனியம் அபிவிருத்தி இலக்கை இற்றைப்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை உருவாக்கும் போது பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் முக்கியத்துவம் காரணமாக 2030 ஆம் ஆண்டளவில் நீரின் தரத்தை மேம்படுத்துதலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் சுகாதாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் இலங்கை எட்டியுள்ள உடன்பாடுகள் மற்றும் தமது நாட்டு மக்களுக்கு குடிநீரை வழங்கும் பொறுப்பும் விசேடமாக குடிநீர் சார்ந்ததாக நாட்டின் சில பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுத்துள்ள சீறுநீரக நோய் நிலையும் காரணமாக இலங்கை அரசும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பில் சிறப்பான கவனத்தைச் செலுத்தியுள்ளது.

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பிலான அரசின் இந்த முன்னுரிமையான, சிறப்பான குறிக்கோளை அடைவதற்காக கொள்கை வகுத்தல், அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் செயற்பாடுகளுக்காக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக தனியான அமைச்சொன்று அனைத்து அரசுகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015 ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு எனும் பெயருரைய அமைச்சு 1870/15 இலக்க 2015.01.18 திகதிய வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்பு கூட்டுத்தாபனம் ஆகிய திணைக்களங்களும் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலின் பின்னர் அமைச்சின் விடய தானம் மீளாய்வின் பின்னர் அதற்கமைய 1933/13 இலக்க 2015 செப்டெம்பர் 21 திகதி வர்த்தமானி மூலம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு பிரகடனப் படுத்தப்பட்டதுடன் இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய நீர் வழங்கல் திணைக்களமும் உள்ளடங்குகின்றன. விடய தானம் மீளாய்வு செய்யப்பட்டாலும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகலை வழங்கும் பொருப்பு இந்த அமைச்சுக்கு தொடர்ந்து உள்ளது

**கருமங்கள்**

- நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்ங்களை உருவாக்குதல் மற்றும் உரிய திணைக்களங்கள், நியதிச் சபைகளின் விடயப்பரப்புக்களுடன் தொடர்புடைய விடயங்களின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு.

- விசேட நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள்

- நகர அபிவிருத்தி செயற்பாடுகளின்போது தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்

- அனைத்து குடிமக்களுக்கும் தூய குடிநீரை வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நீர் வழங்கல் சேவைகள், மலக்கழிவகற்றல் முறைமை மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பில் பரிசோதித்தல், திட்டமிடுதல், திட்டத்தைத் தயாரித்தல், நிர்மாணங்களை நெறிப்படுத்தல் மற்றும் பராமரித்தல்

- சமூக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரக் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும், முறைப்படியும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை எடுத்தல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

**அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்**

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலின் பின்னர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1993/13 இலக்க 2015 செப்டெம்பர் 21திகதிய அதிசிறப்பு வர்த்தமானி மூலம் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் பின்வரும் இரண்டு நிறுவனங்கள் வழங்கப்பட்டன.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
- தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

இலங்கையின் குடிநீர் வழங்கல் பொறுப்பு ஆரம்ப காலத்தில் அரச வேலைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1965 இல் ஏற்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கையின் குடிநீர் வழங்கல் தொடர்பான வரலாற்றில் மிக முக்கியமான திருப்பு முனையானது குடிநீர் மற்றும் சுகாதார வசதி வழங்கலை முறைமைப்படுத்துவதற்காக 1975 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பாராளுமன்றச் சட்டமாகும். இச்சட்டத்தின் மூலம் தற்போதுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உருவானதுடன், அதன் கருமங்களை நிறைவேற்றத் தேவையான சட்டபூர்வ அதிகாரம் கிடைத்தது.

**ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள்**

- குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாத விசேடமாக சுகாதார அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள நபர்கள் மற்றும் பிரதேசங்களை இனங்காணுதல்

- உள்நாட்டு வெளிநாட்டு நிதியங்களின் உதவியுடன் நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படை செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்

- நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களை அமுல்படுத்துதல், பேணிச்செல்லல் மற்றும் திருப்திகரமான சேவையை நுகர்வோருக்கு வழங்குதல்

- வழங்கப்படும் சேவைகளுக்காக நியாயமான கட்டண முறையை உருவாக்குதல், கட்டணம் அறவிடுதல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் சேவைகளை நல்ல முறையில் பேணுவதற்குத் தேவையான மனிதவள அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்பங்களை இனங்காணுதல், பாதீட்டை வகுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு உட்பட அவை தொடர்பான ஏனைய இணைவான கருமங்கள்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆண்டில் 337 குடிநீர் வழங்கல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வந்ததுடன், அதனூடாக பாதுகாப்பான குழாய்க் குடிநீர்

38.7% உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் குழாய்களால் 2.08% மலக்கழிவகற்றலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச் சேவைகளைப் பேணிச்செல்லுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக ரத்மலானயிலுள்ள அலுவலகத்துக்கு மேலதிகமாக 11 மாகாண அலுவலகங்களும், 25 மாவட்ட அலுவலகங்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு இருப்பதுடன், இந்த நிறுவனக் கட்டமைப்பில் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் 10,335 ஆளணியினர் 2017.12.31 அளவில் பணியாற்றுகின்றனர்.

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் 2014/09/22 திகதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக2014/09/19 ஆம் திகதியிலிருந்து செயற்படத்தக்கவாறு நிறுவப்பட்டது. விசேடமாக கிராமீயப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உட்பட மக்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சேவைகள் கிட்டாத பிரதேசங்கள் தொடர்பில் இத் திணைக்களம் முதன்மையாக கவனம் செலுத்துகிறது.2017 ஆம் ஆண்டலவில் பாதுகாப்பான குடிநீா குழாய் மூலம் வழங்குவதில் 10.5% ஒத்துழைப்பு வழங்கியது.

**பணிகள்**

- இலங்கையின் அனைத்து கிராமிய மக்களுக்கும் அந்த சமூகத்தின் பங்களிப்புடன் தூய்மையான மற்றும் போதுமானளவு நீர், அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்குதல்.

- சமூக மட்ட அமைப்புக்களின் நிதி முகாமைத்துவம் அடங்கலாக நல்லாட்சியை முறைமைப்படுத்தல்

- கிராமிய நீர்வழங்கல் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் அதி துறையுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள், அமைப்புக்களை இணைப்புச் செய்தல்

- நீர் மூலங்களைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக பொறிமுறையொன்றை உருவாக்குதல்

- கிராமிய நீர்வழங்கல் துறைக்குத் தேவையான புதிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல்

இந்த நிறுவனத்தின் தலைமையகம் தலவத்துகொடவில் அமைந்துள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கக்கூடியவாறு மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளின் உள்ளடக்கம்

**பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளடக்கம்- டிசம்பர் 2017**




**வரைபு01**
மூலம்- தே.நீ.வ.ச

**குழாய்வழி நீர்இணைப்புக்கள்1996-2017**




**வரைபு 02**
மூலம்- தே.நீ.வ.ச

## இலங்கையில் சுகாதார வசதிகளின் உள்ளடக்கம்




**வரைபு** 03
**மூலம்- தே.நீ.வ.ச**

### பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரப்பாதுகாப்பு தொடர்பான கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள்

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாதகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை வழங்குவது அரசின் முதன்மைக் கொள்கையாகும். அதற்காக பின்வரும் உபாயங்கள் பின்பற்றப்படுகின்றன.

### பாதுகாப்பான குடிநீர் தொடர்பான உபாயங்கள்

- அதிகரித்துவரும் வீட்டு மற்றும் வீடு சாராத கேள்வியைக் கருத்தில் கொண்டு குழாய் நீர் வழங்கலை அதிகரித்தல்
- பாதகாப்பான குடிநீர் பெற்றுக் கொள்ளும் போது பிரதேச ரீதியா நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்
- பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட காரணிகள் மற்றும் ஆகுசெலவு போன்றவற்றைக் கருத்திலெடுத்து புதிய நீர் வினியோகத் திட்டங்களை திட்டமிடுதல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்
- நீர்மூலங்கள்/உள்ளுளிப்பு நீர்வழிகள்/சமூக மட்ட அமைப்புக்களால் முகாமைத்துவம் செய்யப்படும் திட்டங்களின் நீரின் தன்மை மற்றும் அளவைக் கூட்டுதல்
- நீர்க் கருவிகள்/ஏனையஉதிரிப்பாகங்களுக்கு தராதரத்ங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் குழாய் நீர் வழங்கல் முறைமைகளை மேம்படுத்தல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்க்கான அடிப்படைக் காரணத்தை இனங்காண்பதற்காகவும் அந்த நோயைத் தவிர்ப்பதற்காகவும் நிலக்கீழ் நீரைத் துாய்மையாக்குவதற்காக மிகவும் சாத்தியம் மிக்க துாய்மையாக்கல் முறைமையை அறிமுகம் செய்வதற்காக தரமுயர்ந்த மற்றும் நவீன ஆராய்ச்சிகள் / ஆய்வுகளை மேற்கொள்ளல்
- கைத்தொழில் துறைக்கு 24 மணித்தியாலமும் நிலையான குழாய் நீர் பெறுதலுக்காக அதிகரித்துவரும் கேள்வியை நிறைவுசெய்தல்
- குழாய் நீர் வழங்கல் சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் கொள்லளவை அதிகரித்தல்
- மக்கள் நேயமிக்க இலாபமீட்டும் நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினை இயக்குவதற்கான வழிகாட்டல் வழங்கல்

**பாதுகாப்பான குடிநீர் தொடர்பான இலக்கு**

- 2020ஆண்டளவில் அனைத்து இலஙகையருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்
- 2020ஆண்டளவில் குழாய் நீர் வழங்கல் கொள்லளவை 60% வரை அதிகரித்தல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குதல்
- நீரின் தரத்தை 100% உறுதி செய்தல்
- கைத் தொழிலுக்கான நீர்த் தேவையை 100% முழுமைப்படுத்தல்
- குடிநீர் வசதிகளை வழங்கும் நிறுவனக் கட்டமைப்பை வினைத்திறனாக்குதல்

**சுகாதார பாதுகாப்பு தொடர்பான உபாயங்கள்**

- விசேடமாக கிராமிய மற்றும் தோட்டத்துறையும் அடங்கலாக சுகாதாரப் பாதுகாப்பு வசதிப் பயன்பாட்டை உயர்த்துதல்.

- சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகதாரம் தொடர்பிலான கல்வி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.

- முதன்மை நகரங்களில் வடிகாலமைப்பு வசதிகளை அதிகரித்தல் நாட்டின் கழிவு நீரகற்றல் சேவைகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக உதவியளிக்கக்கூடியவாறு தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையின் நடவடிக்கைகளை மறுசீரமைத்தல்.

**சுகாதார பாதுகாப்பு தொடர்பான இலக்கு**

- நாடு பூராவும் 100% ஆரோக்கியமான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்.

- 2020 ஆகும்போது நகர்ப்புற சனத்தொகையின் 3.3% த்தினருக்கு குழாய் மூலமான மலக்கழிவு வசதிகளை வழங்குதல்.

## அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகையை அளவிடுவதற்கான சுட்டிகள்.

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்காக அந்தந்த துறைகளின் பிரகாரம் பின்வரும் சுட்டிகளை பயன்படுத்தப்பட்டுள்ளது.

### I. குடிநீர் பாதுகாப்பு செயலாற்றுகை சுட்டிகள்

1. பாதுகாப்பான குடிநீர் வசதி விகிதாசாரம்
2. குழாய் நீர் வழங்கல் விகிதாசாரம்
3. நாடு முழுவதிலும் வருமானம் ஈட்டாத நீர்வழங்கல் விகிதாசாரம்
4. கொழும்பு நகரின் வருமானம ஈட்டாத நீர்வழங்கல் விகிதாசாரம்
5. ஒட்டுமொத்த குழாய் நீர் இணைப்புகளின் எண்ணிக்கை (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாளமைப்பு சபைவழங்கியதன் விகிதாசாரம்
6. ஆண்டில் வழங்குவதற்க்கு இலக்குவைத்த குழாய்நீர் தொடர்புகளின் அளவு,

### I. சுகாதாரப் பாதுகாப்புக்கான செயலாற்றுகை சுட்டிகள்

1. போதுமானளவு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளின் விகிதாசாரம்
2. குழாய் மூலமான மலக்கழிவகற்றல் விகிதாசாரம்

### III ஊழியர்களின் திறன்

1. குழாய் நீர் தொடர்புகள் 1000 க்கு உள்ள மொத்த ஊழியர்கள்

# இரண்டாவது அத்தியாயம்

# 2017 ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் 2017.12.31திகதிக்கான முன்னேற்றம்

| | கருதிட்டம் | ஒதுக்கிடு (ரூ.மி) | 2017.12.31திகதிக்கான நிதி முன்னேற்றம் | | கையிருப்பு பில்கள் | நிதி முன்னேற்றம்( ாையிருப்பு பில்களுடன்) 2017.12.31 திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.மி.) | % | (ரூ.மி.) | (ரூ.மி.) | % |
| | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமச்சு | | | | | | |
| 1 | மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குதல் | 1,000.00 | 600.71 | 60 | 173.71 | 774.42 | 77 |
| 2 | கிராமிய நீர் வழங்கல் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 200 | 150.88 | 75 | 30.77 | 181.65 | 91 |
| 3 | சுகாதார பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாட்டின் மீழாய்வு –அகில இலங்கை சுகாதார நிகழ்ச்சி திட்டம் | 30 | 30 | 100 | - | 30 | 100 |
| 4 | மழைநீர் சேகரிப்புக் திட்டத்தினை நடைமுறை படுத்தல் | 5 | 4.51 | 90 | 0.342 | 4.85 | 97 |
| 5 | நீர் வளப் பிரதேசங்கலை பாதுகாத்தல் நீர் ஏந்துப்பகுதிகல் மாசடைவதைத்தடுத்தல் | 5 | 3.47 | 69 | 1.132 | 4.6 | 92 |
| 6 | கேகாலை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களுக்கான குடிநீர் வசதிகளை வழங்குதல் | 158.4 | 30.58 | 19 | - | 30.58 | 19 |
| 7 | நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் | 3,355.38 | 1,220.78 | 36 | 1,270.17 | 2,490.95 | 74 |
| 8 | சம்மாந்துறை மற்றும் கல்முனை ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 200 | 3.04 | 2 | - | 3.04 | 2 |
| 9 | குலி பவுசா் | 289.62 | 105.41 | 36 | - | 105.41 | 36 |
| **A** | உப மொத்தம் (1+2+3+4+5+6+7+8) | **5,243.40** | **2,149.38** | **41** | **1,476.12** | **3,625.50** | **69** |
| 9 | நீர் வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்பு மேம்பாட்டு திட்டம் (WSSIP) | 3,575.00 | 3,194.64 | 89 | - | 3,194.64 | 89 |
| 10 | சீன-இலங்கை ஒத்துழைப்பு ஆராய்ச்சி செயற்திட்டம் | 300 | 48.99 | 16 | 15.42 | 64.41 | 21 |
| **B** | ஆமைச்சின்(A+9+10) | **9,118.40** | **5,393.01** | **59** | **1,491.54** | **6,884.55** | **76** |
| | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | | | | | | |
| 11 | ஆந்தர கஸ்யாய நீர் வழங்கல் திட்டம் | 70 | 12.43 | 18 | 4.04 | 16.47 | 23 |
| 12 | மூாத்தறை குருகிய காள அபிவிருத்தி திட்டம் | 120 | 16.66 | 14 | 40.9 | 57.56 | 48 |
| 13 | உலர் வலய நகர நீர் சுகாதார பாதுகாப்பு கருத்திட்டம் - (ஆசிய அபிவிருத்தி வங்கி ) | 1,150.00 | 1,038.92 | 90 | - | 1,038.92 | 90 |
| 14 | கொழும்பு பகுதியில் வீட்டுக் கழிவுநீர் தொடர் அமைப்புக்கலை அதிகரித்தல் சுகாதாரப் பாதுகாப்புக்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குதல் | 399.74 | 179.24 | 45 | - | 179.24 | 45 |
| 15 | தும்புத்தேகம நீர் வழங்கல் திட்டம் | 10 | - | 0 | - | - | 0 |
| 16 | கட்டானை நீர் வழங்கல் திட்டம் | 50 | 0.1 | 0 | - | 0.1 | 0 |
| 17 | பாரியஅளவிலான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டம்(Disbursement of Ongoing Projects) | 15,000.00 | 16,704.60 | 111 | - | 16,704.60 | 111 |
| 18 | திருகோணமலை நீர் வழங்கல் மேம்பாட்டு முறை | 200 | 20.02 | 10 | 40.71 | 60.73 | 30 |
| 19 | நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்(GOSL-UNICEF) | 1.92 | 1.61 | 84 | - | 1.61 | 84 |
| 20 | UNICEF வரற்ச்சி பாதிப்பை குறைத்தல அனர்த்த முகாமைத்துவ திட்டம் | 59.6 | 56.36 | 95 | - | 56.36 | 95 |
| 21 | பாரிய நீர் வழங்கல் மறறும் கழிவு நீர் அகற்றல் திட்ட தேசிய நிதியில் | 11,168.90 | 11,119.08 | 100 | - | 11,119.08 | 100 |
| 22 | பாரிய நீர் வழங்கல் மறறும் கழிவு நீர் அகற்றல் திட்டங்கள் உள்ளூா வங்கி கடன் நதி | 15,375.00 | 15,254.72 | 99 | - | 15,254.72 | 99 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | பாரிய நீர் வழங்கல் மறறும் கழிவு நீர் அகற்றல் திட்டங்கள் வெளி நாட்டுவங்கி கடன் நிதி மூலம் | 19,286.00 | 16,631.08 | 86 | - | 16,631.08 | 86 |
| **C** | உப மொத்தம (11+12+13+14+15+16+17+18+19+20+21+22+23) | **62,891.16** | **61,034.82** | **97** | 85.65 | 61,120.47 | 97 |
| 24 | காணி கைப்பற்றுதல் | 885 | 162.82 | 18 | - | 162.82 | 18 |
| 25 | விரைவுபடுத்தப்பட்ட பிரதேச சபை வீதி அபிவிருத்திதிட்டத்தின் காரனமாக பயன்பாட்டுசேவைகலை மாற்றுதல்/மறுபிரவேசம் செய்தல் | 500 | 235.81 | 47 | 149.43 | 385.24 | 77 |
| 26 | அபிவிருத்தியடைந்து வரும் சிறுநகர் நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நிலுவை | 130.82 | 130.34 | 100 | - | 130.34 | 100 |
| **D** | உப மொத்தம (24+25+26) | **1,515.82** | **528.97** | **35** | 149.43 | 678.40 | 45 |
| **E** | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (C+D) | **64,406.98** | **61,563.79** | **96** | 235.08 | 61,798.87 | 96 |
| தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் | | | | | | | |
| 27 | சமூக நீர் வழங்கல் முரைகலை மேம்படுத்தல் | 100 | 99.99 | 100 | - | 99.99 | 100 |
| **F** | திணைக்களத்தின் மொத்தம் (27) | **100** | **99.99** | **100** | | 99.99 | 100 |
| | முழு மொத்தம்(B+E+F) (உள்ளூர் வங்கிகள் நிதியுதவியின் கீழ் இயங்கும் திட்டங்கள் தவிர்ந்த ) | **73,625.38** | **67,056.79** | **91** | **-** | | |
| 28 | ஊள்ளுர் வங்கிகள் நிதியுதவியில் இயங்கும் திட்டங்கள் | 8,599.00 | 6,914.00 | 80 | - | | |
| | முழு மொத்தம் (உள்ளூர் வங்கியின் நிதி உதவியின் கீழ் இயங்கும் திட்டங்களுடன்) | **82,224.38** | **73,970.79** | **90** | **1,726.62** | 75,697.41 | 92 |

## அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள்

1. மூலகாரணம் அறியப்படாத சிறுநீரக நோய் பரவும் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல்
2. SACOSAN (தெற்காசிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான மாநாடு) பிரகடனத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.
3. மழை நீர் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம்
4. நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம்
5. கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தல், சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல
6. கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் மழை நீர் சேகரித்தல் தொடர்பில் அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிகள்
7. நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி
8. நீர் வழங்கல், சுகாதாரப் பாதுகாப்பு மேம்படுத்தல் கருத்திட்டம் (உலக வங்கி, இலங்கை அரசு)

### 01. மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் கட்டுப்பாட்டுக்காக பாதுகாப்பான குடிநீர் வழங்கல்

தற்போது அனுராதபுரம், பொலன்னறுவை. குருணாகல், வவுனியா, மாத்தளை, பதுளை, அம்பாந்தோட்டை, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உயிர்கொல்லி. தொற்றா நோயாக பரவி வரும் மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ள பிரதேசங்களில் வாள்ந்துவரும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் நோக்குடன் குறுங்கால, இடைக்கால, நீண்டகால ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2017 ஆம் ஆண்டில் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதில் 780.23 மி.ரூபா செலவிடப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது. ஆண்டின் இறுதியளவில் 78% நிதி முன்னேற்றம் அடயப் பட்டுள்ளது.

இதன்போது அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்களில் நீர்க்குழாய் நீடிப்பின் மூலமாக தூய நீர் வழங்கல் முதன்மையானதாகும். 2017ஆம் ஆண்டில் 191.8 மீற்றர் அளவில் நீர்க்குழாய் நீடிக்கப்பட்டுள்ளதுடன் நீர்க்குழாய் நீடிப்பு செய்யமுடியாத பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு பொறிகளை நிறுவுதல் (RO Plants) மழை நீர் தாங்கி நிர்மாணித்தல், பவுசர் மூலம் குடிநீர் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.

- 2017 ஆம் ஆண்டில் நீர் சுத்திகரிப்பு பொறிகளை பொருத்துதல் திட்டத்தில் 111பொறிகள வழங்கப்பட்டுள்ளது இதன்போது அனுராதபுரம் பொலன்னறுவை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி,புத்தளம் இரத்தினபுரி, திருகோணமலை, மற்றும்குருணாகல் ஆகிய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.
- பவுசர் மூலம் நீர் வழங்கல், குழாய்க் கிணறு மூலம் நீர் வழங்கல், மழைநீர் தாங்கிகளை நிர்மாணித்தல் போன்றவை இத்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகளாகும்.



அம்பகஹ வெவ, அனுராதபுரம்



குருகந்தேகம, அனுராதபுரம்



பலஹொந்தவெவ, அனுராதபுரம்



மஹகனதராவ, அனுராதபுரம்




கோனுஹத்தெனாவ- அனுராதபுரம் கெபதிகொள்ளாவ




கஹடகொல்லெவ, அனுராதபுரம்



அனுராதபுர மதவாச்சி மகா
வித்தியாலயம்



அனுராதபுரம் அல்ஹுதா
முஸ்லிம் கனிஷ்ட பாடசாலை

## 02. சீனா இலங்கை பிரதான ஆராய்ச்சி செயற்திட்டம் (CSLRGP)

குறித்த செயற்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளைக் கொண்டது.

- மூலகாரணி கண்டறியப்படாமல் இலங்கையில் பரவிக்கொண்டிருக்கும் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடுமான காரணங்களைக் கண்டறிதல்
- இலங்கையில் ஆட்கொல்லி நோயாக சிறுநீரக பாதிப்பு நோய் பரவி வரும் பிரதேசங்களில் நீரைச் சுத்திகரித்தல் முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்
- உலர் வலயத்தில் மழை நீர் சேகரிப்பு முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்
- காணிப் பயன்பாட்டு திட்டம், ஒன்றிணைந்த நீர்வள முகாமைத்துவ திட்டம் மற்றும் ஒன்றிணைந்த நீர் வழங்கல் மற்றும் சுகநல, உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

2017ம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 300 மில்லியன் ரூபா நிதி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2017 செப்டம்பர் இறுதிப் பகுதியில் இந்த செயற்திட்டத்துக்காக 18.58 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் பௌதீக மேம்பாடு கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

| புரிந்துணர்வு ஒப்பந்தம் | செயல்பாடுகல் | நிலைமை | முன்னேற்றம் |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நகர அபிவிருத்தி>நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசின் சீன அகடமி றிவியலகத்திற்க்கும் இடையே புரிந்துனர்வு ஒப்பந்தம் | ஒன்றினைந்த ஆராய்ச்சி மையம் | 1. சாத்திய வள அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது<br>2. கருதுகோள் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது<br>3. கூட்டஅறிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது<br>4. முழுமையான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது<br>5. திட்ட குழு மூலம் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு இதுதொடர்பான கருத்துக்கலை முன்வைப்பதற்க்கு 4 வது தொகுப்பை சீன குழுவிட்க்கு முன்வைத்து அவர்களின் பதிலை எதிர்பார்த்தல் | 58% |
| | கற்றல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 01. இலங்கையின் சுமார் 20 தொழில்சார் நிபுணர்கள் பயிற்சிகளுக்காக சீனா சென்று வந்துள்ளனர்.<br>02. பல்வேறு சந்தர்ப்பங்களில் சீன நிபுணர்கள் மேற்பார்வை பரீட்சித்தல்களுக்காக இலங்கை வந்து சென்றுள்ளனர | 30% |
| | சுற்றுப் பயண ஒத்துழைப்புகள் | இருதரப்பு அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்காக சீனா மற்றும் இலங்கைக்கு இடையில் பல்வேறு சுற்றுப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. | 75% |
| | இருதரப்பு செயலமர்வுகள் | 1. அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் பங்குபற்றுதலுடன் 2016 மார்ச் மாதம் அடிப்படை ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் சீனாவின் விஞ்ஞானக் கழகத்துடன்(CAS) இணைந்ததாக நடைபெற்றது.<br><br>2.2019ல் உலகளாவிய நீர்வழங்கல் அமைப்புகளின் இரண்டாவது சர்வதேச மாநாடு (IWA) நடைபெறும | 30% |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப முன்மாதிரி | 1. கஹடகஸ்திகிலிய மற்றும் யாழ்ப்பாணம் பிரதேசங்களில் மழைநீர் சேகரிப்பு கூறுகள் தாபிக்கப்பட்டுள்ளது<br>2. நிலத்தடி நீரைச் சுத்திகரிப்பதற்கான அமைவிடம் தயார்படுத்தப்பட்டுள்ளது.<br>3.EDR ஸ்தாபித்தல் | 75% |
| | ஆராய்ச்சி ஒத்துழைப்பு செயற்திட்டம் மற்றும் கள மேற்பார்வை | 1. இரசாயன மற்றும் இயற்கைக் கழிவுகளை நீரில் இருந்து அகற்றிக் கொள்ள சுத்திகரித்தல்<br><br>2. கட்டுகஸ்தோட்டை தற்காலிக ஆய்வு கூடத்தில் ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.<br><br>3. சீனாவின் விஞ்ஞானக் கழகத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 10 மில்லியன் ரூபா பெறுமதியான கருவிகள் தற்போதைக்கு பொருத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் பரீட்சார்த்த செயற்பாடுகள் தற்போது நடைபெறுகின்றது.<br><br>4. கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் சிறுநீரகப் பாதிப்பு காணப்படும் பிரதேசங்களில் இருந்து ஆய்வு மாதிரிகளை பெற்று அவற்றை மறு ஆய்வுக்குட்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும் | 50% |
| | வெளியீடுகள் மற்றும் அனுபவ அறிவை பரிமாறிக் கொள்ளல் | ஆராய்ச்சி முன்மொழிவுகள் தற்போதைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 20% |

**சீனா மற்றும் அமைச்சின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் 2017 ஆண்டு நவம்பர் 17 திகதி அடிக்கல் நாட்டும் வைபவம்**










எதிர்கால நடவடிக்கைகள்

- விரிவான வடிவமைப்பை பு+ரத்திசெய்தல் மற்றும் அனுமதி பெறுதல் (2018பெப்ரவரி) செயற்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடல்(2018 ஏப்ரல்)
- கட்டிட அமைப்பு மற்றும கட்டுமானத்திற்கான ஒப்பந்தம் வழங்கல் (2018ஜூலை)
- ஒபந்தக்காரரின் அணிதிரள்தல் (2018 செப்டெம்பர்)
- ஆய்வகத்தின் கட்டுமானம் (2018 அக்டோம்பர் 2020 ஜூலை)
- ஆய்வகத்தின் திறப்பு (2020 செப்டெம்பர்)

**பேராதனை பிரதேசத்தில் முன்மொழியப்பட்ட ஆய்வகம்**



**கஹடகஸ்திகிலியவில் அமைந்துள்ள EDR அலகு**

சிறுநீரகவியல் நோய்க்காணகாரணத்தைகண்டறியும்நோக்கில் இலங்கையில் கஹகடகஸ்திகிலியவில் நிலத்தடிநீரின் கடினத்தன்மை /உவர் மற்றும் நச்சுக்கலை அகற்றும் சிகிச்சை முறையை மேற்கொள்ளல்தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் சீன விஞ்ஞான ஆய்வகம்

**ENTER A TYPE SMALL PART**





### கஹடகஸ்திகிலியவில் மழைநீரை சேகரிக்கும் அலகு



### 03. SACOSAN (தெற்காசிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான மாநாடு) பிரகடனத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்

சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாடு சார்க் வலய நாடுகளில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் அடிப்படைக் குறிக்கோளுடன் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை குறித்த நாட்டு அரசாங்கங்களுடாக நடாத்தப்படும் மாநாடாகும சார்க் வலய நாடுகளிலுள்ள மக்களிடம் நீர் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பிலான எண்ணக்கருவை அரசியல் தலைமைத்துவத்தினூடாக மேம்படுத்துவதே இந்த மாநாட்டின் முதன்மைக் குறிக்கோளாகும். அதற்கமைய 2011ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான நான்காவது தெற்காசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 30 மில்லியன் ரூபா 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடாகக் கிடைத்தது.

இதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் சமூக நீர் வழங்கல் திணைக்கள ஒத்துழைப்புடன் கீழ் குறிப்பிடப்பட்டுள் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டு இருதியில். 100% பௌதீக முன்னேற்றமும் நிதி முன்னேற்றமும் அடையாப்பட்டுள்ளது.

**அணுகளல் கடினமான அவதானத்க்றிய சமூகத்திற்கு தனி கழிப்பறைகளை அமைத்தல்**

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்கள் சிலவற்றில் வறுமையான குடும்பங்களுக்காக தனிப்பட்ட மலசல கூடங்களை நிர்மாணித்துக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கப்பட்டது.தனிப்பட்ட மலசல கூடங்களை நிர்மாணிப்புக்கு சம்மாந்துறை (16), முந்தல் (50),மாத்தறை (67),தெஹிஅத்தகண்டிய (65), லாகுகல (20), புத்தளம் (70), வரக்காப்பொல (50),இறக்காமம் (50), எல்கடுவை (50), கட்டானை (50),ஹொரொவப்பொத்தானை (50), மற்றும் கொலொன்ன (50)ஆகிய பிரதேச செயலகங்கலின் தனிப்பட்ட மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்காக 586 குடும்பங்கள்

**தெறிவு செய்யப்பட்டன.தெரிவு செய்யப்பட்ட நகர சபைகளுக்காக PP மாதிரி பொது கழிப்பிட வசதிகளை நிர்மாணிததல்.**

பொதுமக்கள் கூடுதலாக ஒன்று சேரும் பொது இடங்களில்PP மாதிரி கழிப்பிட வசதிகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன் ஆரம்ப கட்டமாக அநுராதபுரம், நுவரெலியா ஆகிய இடங்களிலநிர்மாணிப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. 2017 ஆண்டு இருதியில் 100%பௌதீக முன்னேற்றமும் நிதி முன்னேற்றமும் அடையாப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப அலுவலர்களின் செயற்திறனை மேம்படுத்தல்.

2009ம் ஆண்டு மலசல கூடங்களுக்கான கொங்கிறீட் தாங்கிகள் மற்றும் கழிவு நீரை அகற்றுவதற்கான திட்டங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக இலங்கை கட்டளைகள் நிறுவனம் (தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்) தரக்கட்டுப்பாடுகளை வெளியிட்டது. குறித்த தரக்கட்டுப்பாட்டு விதிகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் கழிப்பிட நிர்மாணங்களின் போது நிலக்கீழ் கொங்கிறீட் தாங்கிகளை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே நீர் மாசடைதலைத் தடுப்பதற்கு நிர்மாணத் தொழிலாளர்கள், ஆலோசகர்கள், அதனை மேற்பார்வை செய்யக் கூடிய உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட தரப்பினரை தெளிவூட்டுவது அத்தியாவசியமான விடயமாக உள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு கட்டிட நிர்மாண வரைபடங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால், நிலத்தடி நீர் மாசுபடாமல் பாதுகாப்பதில் குறித்த தொழில்நுட்ப அலுவலர்கள் பாரிய பங்களிப்பொன்றை வழங்கக் கூடிய ஆற்றல் அவர்களுக்கு உள்ளது.குறித்த விடயங்களை கருத்திற் கொண்டு இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ளளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான செயற்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. நுவரெலிய மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களின் பங்களிப்புடன் கருத்தரங்குகள் நடைபெற்றது.





நுவரெலியா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொழில்நுட்ப அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட கழிவுநீர் முகாமைத்தவம் மற்றும் மழைநீர் சேகரிப்பு செயற்திட்டக் கருத்தரங்கம்

## 10 வது சர்வதேச நாடுகளுக்கிடையான செயற்பாட்டுக் குழுக்கள் மட்ட கூட்டம் (ICWG meeting )

தெற்காசிய நாடுகளின் அபிவிருத்திக்கான பங்காளர்கள் உள்ளிட்ட தொடர்புடைத்த நபர்களின் பங்குபற்றலுடன் 2017 செப்டம்பர் மாதம் 11ம் திகதி தொடக்கம் 13ம் திகதி வரை சர்வதேச நாடுகளின் செயற்பாட்டுக் குழுக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றது. 10 வது சர்வதேச நாடுகளுக்கிடையான செயற்பாட்டுக் குழுக்கள் மட்ட கூட்ட கலந்துரையாடலில் கீழ்க்காணப்படும் அடிப்படை விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

1. பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற சுகநல பாதுகாப்பு தொடர்பான 7வது தெற்காசிய மாநாடு அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் சர்வதேச நாடுகளுக்கிடையேயான செயற்பாட்டுக் குழுக்களின் பொறுப்புகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளல்.

2. தெற்காசிய சுகநல பாதுகாப்பு தொடர்பான செயலகம் தொடர்பில் அதிகாரங்கள் கொண்ட சர்வதேச நாடுகளுக்கிடையிலான குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் அர்ப்பணிப்பு தொடர்பில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளல்

3. இலங்கையில் நடைபெறவுள்ள சுகநல பாதுகாப்பு தொடர்பான முகாமைத்துவம் தொடர்பில் உத்தேச பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அறிவித்தல் மற்றும் நேர சூசி மற்றும் பங்களிப்பு தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல்







 

**சுகாதார முகாமைத்துவம் தொடர்பான தெற்க்காசிய வலய பயிட்ச்சியாளரின் பயிற்ச்சி பட்டறை நவம்பர் 24 தொடக்கம் டிசம்பர் 01 வரை MASATHENA, துல்ஹிரிய, இலங்கை**

**ஜெனீவா நீர் வழங்கல் துப்பரவேற்பாட்டு ஒத்துழைப்பு கவுன்சிலுடன் இணைந்து இலங்கையில் நடைபெற்ற சுகாதார பாதுகாப்பு தொடர்பாக தெற்காசிய சாக் வலய நாடுகளின் மாநாட்டிற்க்கு (SACOSAN) பிராந்திய நிலயத்தின் மூலம் ஒத்துழைப்பு வழங்கல்.**

சகோசான் (SACOSAN) என்பது தெற்காசிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான சார்க் வலய நாடுகளில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தி சவால்களை எதிர் கொள்ளல் தொடர்பாக அரசியல் தலைமைத்துவத்தினூடாக மேம்படுத்தும் அடிப்படைக் குறிக்கோளுடன் தலமமைத்து இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை குறித்த நாட்டு அரசாங்கங்களுடாக நடாத்தப்படும் ஒரு மாநாடாகும்.

டாக்கா பிரகடனத்தின் அர்ப்பணிப்புகளை கருத்திற்கொண்டு பிரகடனத்துக்கு அமைவாக இலங்கையில் சுகநல பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த மிக முக்கியமான சில தீர்மானங்கள் மேற்க்கொள்ளப்பட்டன இதற்கமைய 2017ம் ஆண்டின் செப்டம்பர் மாதம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு அமைச்சரவையின் அனுமதியுடன் சுகநல பாதுகாப்பு தொடர்பான பிராந்திய மத்திய நிலையம் ஒன்றை அமைச்சுக்கு கீழ் உருவாக்கியதுடன் 2014 பெப்ரவரி மாதம் கத்மண்டுவில் நடைபெற்ற அரச இடைநிலை பணி குழுகூட்ட பரிந்துறையின்படி (Terms of Reference) ஏற்றுக் கொள்ளப்பட்ட விசேட பணிகள் நிறைவேற்றப்படுவதுடன் உள்நாட்டு பங்காளர்களுடன் செயலகத்தை நடைமுறைப்படுத்த தேவையான விரிவான திட்டம் ஒன்று அமைச்சகத்தால் வகுக்கப்பட்டுள்ளது.

சுகநலம் தொடர்பான பிராந்திய மத்திய நிலையத்தின் ஆரம்ப பணியாக சுகநல வேலைத்திட்டங்ளுக்கு தேவையான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி திட்டங்கலை நடத்துவதற்கு சுவிஸ்லாந்தின் ஜெனீவாவில் நீர் வழங்கல் மற்றும் சுகநல மேம்பாட்டு ஒத்துலைப்பு கவுன்சில் மூலம் பிராந்திய மத்திய நிலயத்திற்கு உதவ முன்வந்துள்ளது.

சக்கோசான் நடுகளின் வலுவான கோரிக்கைக்கு பதிலாக நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு ஒத்துழைப்பு கவுன்சில் சுகாதார மேலான்மைக்காக இந்தியாவின் பல பகுதிகளில் அபிவிருத்தி பங்காளர்களுக்கும் மற்றும் பாக்கிஸ்தான்>நேபாள அரசாங்கங்களுக்கு தொழில் துறை உதவி (கொள்கை,திறன் மற்றும் பயிற்சி உட்பட) வழங்கப்பட்டுள்ளது இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட்டாலும் சுகாதார மேலான்மைக்காக கொள்கைகள் மற்றும் நடைமுறை மாற்றத்திற்கான இதுவரை நீர் வழங்கல் மற்றும் துப்பரவுவேட்பாட்டு ஒத்துழைப்பு கவுன்சில் மூலம் உதவிகளை பெராவிடினும் சகோசான் நாடுகள் 5 இன் வேண்டுகோளுக்கமைய நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு ஒத்துழைப்பு கவுன்சில் மூலம் சுகாதார முகாமைத்துவத்திற்கு உள்ளுர் பயிற்ச்சியாளாகளுக்கு பயிற்ச்சியளிக்க திட்டமிட்டுள்ளது.

## பயிற்ச்சி நோக்கங்கள்

1. சுகாதார முகாமைத்துவம் WASH உட்பட திறன் மற்றும் ஆற்றல் உள்ள சிரேஷ்ட பயிற்சியாளர் குழு ஒன்றை உருவாக்கியதன் பின் அவர்கலை தேசிய மற்றும் மாகாண மற்ற வளதாறிகளாக செயல்படும் நிறந்தர பயிற்சியாலர்கலா உருவாக்குதல்.

2. SACOSANIV, V, மற்றும் VI மூலம் நடத்தப்படும் பொருப்புணர்வுக் கொள்கை மற்றும் பயன்பாட்டிட்கு வழிகாட்டுதலுக்காக அப்கனிஸ்தான். பூட்டான்,மாலைதீவு. வங்காளதேசம், ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்க்கு ஒத்துலைப்பு வழங்குதல்.

3. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் முழுமையான சுகாதாரவசதிகள் மற்றும் ஆரோக்கிய தேவைகளுக்கு நடைமுறை ரீதியான கவனம் செலுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்திக்கான இலக்கில் 6.2 வது இலக்கை செயல்படுத்தல்.

### பயிற்சி பெறுவோர்

- ஆப்கனிஸ்தான், பங்களதேஷ், பூடான், மாலைதீவு ஆகிய நாண்கு நாடுகலில் இருந்து 34 பங்கேற்பாளர் குழுவை பெயரிட்டுள்ளது
- இலங்கை அரச சேவை சுகாதாரம், கல்வி, சமூகநலன், நிதி, மற்றும் உள்ளூராட்சி மாகாணசபை களப்பணி சிரேஷ்ட அதிகாரிகள் 34 பேர்
- இலங்கை இரத்மலானை விழிப்புலண் இழந்தோர் (குருட்டு) கல்லுரியில் 4 ஊழியர்கள் உட்பட கல்வி, சுகாதாரம், சுகாதார முகாமைத்துவம் தொடர்பான செயல்கலில் இடுபட்டுள்ள சிவில் சமூக பங்கேற்பாலர்கள் 06 பேர்

### பயிற்சி வழங்கு வோர்

- வளதாரிகளாக ஜெனீவா, இந்தியா, நேபாலம் ஆகிய நாடுகலில் இருந்து சுகாதார முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட பயிற்சியாலர்கள் 8 பேர் கலந்து கொள்ளல்

## 04. மழைநீர் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பொதுமக்களிற்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்க்கு குழாய்நீர் விநியோக திட்டங்கள், நிர் பவுசர்கள், நீர் பீப்பாக்கள், எதிர்ப்பிரசாரண முறைத் திட்டங்கள் (RO) மேம்படுத்தப்பட்ட ஆழம்மில்லாத கிணற்றுத் தொகுதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு தொகுதிகள் போன்ற முறைகளை பின்பற்றுதல் விசேடமாக எமது நாட்டில் குறைந்த மழை வீழ்ச்சியைப் பெறும் பிரதேசங்களை இலக்காகக்கொண்டு அங்கு வாழும் மக்களின் நீர்த் தேவையை நிறைவேற்றுவதற்காக நீரை வழங்கும் முறைகளில் ஒன்றாக மழைநீர் சேகரிப்பு செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. 2017ஆம் ஆண்டில் வடமாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தாங்கிகலை அமைப்பதற்க்கு 05 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது இத்திட்டத்தை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும்தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் செயல் படுத்துகிரது 2017 டிசம்பர் இருதியில் 100% பௌதீக முன்னேற்றமும் 93% நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.






## 05. நீரேந்து பகுதிகளைப் பாதுகாக்கும் செயற்திட்டம்

மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் நீர் மூலங்கள் மாசடைதலை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பதும், சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக முக்கியமான காரணியான நீரோந்து பிரதேசங்களைக் பாதுகாப்பதற்காக அமைச்சினால் தே.நீ.வ.சபை மற்றும் தே.நீ.வ. திணைக்களத்தின் உதவியுடன் இந்த செயற்திட்டம் 05 மில்லியன் ரூபா நிதியில் அமுலாக்கப்படுகிறது.

